## கோவில் கருவறைக்குள்ளும் தமிழைக் கொண்டு வந்தது கழகம்! கழகத்தால்

# தமிழர் திருமணத்தை தமிழில் நடத்த உரிமை கிடைத்துள்ளது!

## தூத்துக்குடியில் – தங்கபாண்டியன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**தூத்துக்குடி,நவ.16-**

**தூத்துக்குடியில், நேற்று முன்தினம் (14.11.2024) இராஜபாளையம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தங்கபாண்டியனின் மகன் டி.லட்சுமணன் - எம்.ஏ.அக்ஷயா இணையரின் திருமண விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு திருமணத்தை நடத்தி வைத்தார்.**

**அப்போது துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

முதலமைச்சர் கழகத் தலைவரின் ஆசிகளுடன் இந்தத் திருமண விழா, கழகத்தின் குடும்ப விழாவாக மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அண்ணன் தங்கபாண்டியன் அவர்களின் அன்பு மகன் இராமன் அவர்களின் திருமணத்தை முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு நடத்தி வைத்தார்.

இந்தமுறை இன்னொரு மகனின் திருமணத்தை இங்கே நடத்தி வைக்க, எனக்கு அந்த நல் வாய்ப்பைக் கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2024) தூத்துக்குடியில், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன் அவர்களின் மகன் டி.லட்சுமணன் – எம்.ஏ.அக்சயா ஆகியோரின் திருமண விழாவினை நடத்தி வைத்து இணையர்களை வாழ்த்தி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், மேயர் பெ.ஜெகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மிகமிக முக்கியமானவர்

அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள் கழகத்தின் ஏற்றத்திற்காக உழைக்கின்ற உடன்பிறப்புகளில் மிகமிக முக்கியமானவர். மூன்று நாட்களுக்கு முன்பு விருது நகருக்கு வருகை தந்த நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் அண்ணன் தங்கபாண்டியன் அவர்களின் பணிகளை உச்சிமுகர்ந்து பாராட்டினார்.

தலைவர் அவர்கள், அவ்வளவு சாதாரணமாக யாரையும் பாராட்டிவிட மாட்டார். அப்படிப்பட்ட தலைவர் அவர்கள் அவரைப் பாராட்டுகிறார் என்றால், அவரின் பணி அவ்வளவு சிறப்பானதாக இருந்திருக்க வேண்டும். அந்தச் சிறப்புகளைப் பெற்றவர்தான் அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள்.

### உழைப்பால் உயர்ந்தவர்

அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள் கழகத்தின் அடிப்படை உறுப்பினராகப் பணிகளைத் தொடங்கியவர். படிப்படியாகச் செட்டியார்பட்டி பேரூர் கழகச் செயலாளர், வார்டு கவுன்சிலர், ஒன்றியக் கழகச் செயலாளர், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினர் என்று தன் உழைப்பால் மக்கள் பணியால் உயர்ந்தவர்தான் அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள்.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், இங்கு ஒருவர் சொல்லிக்கொண்டு இருந்தார். `மோடி எங்கள் டாடி' என்று. அவரை வீட்டுக்கு அனுப்பி அவரை காலி செய்தவர்தான் அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள். விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த அண்ணன கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் கழகத்தின் கோட்டையாகத் தன் மாவட்டத்தை வைத்து இருக்கிறார் என்றால், அதற்கு அண்ணன் தங்கபாண்டியன் அவர்களின் பங்களிப்பும், உழைப்பும் மிகமிக முக்கியமானது.

### பாராட்டியாக வேண்டும்

அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களையும், அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களையும் பாராட்டியாக வேண்டும். சரியாக, மூன்று நாட்களுக்கு முன்பு, அவரின் மாவட்டத்தில் முதலமைச்சரை வைத்து, ஒரு நிகழ்ச்சியை நடத்திவிட்டார். மூன்று நாட்களுக்குப் பிறகு, இன்று தூத்துக்குடி மாவட்டத்தில் என்னை வைத்து ஒரு திருமண நிகழ்ச்சியையும் அவர் நடத்திவிட்டார் என்றால், அது அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்களின் திறமைதான் காரணம்.

தான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற நாள் முதல், தன் சட்டமன்ற உறுப்பினர் ஊதியத்தை மக்கள் நலப்பணிகளுக்காக மட்டுமே அளித்து வருகிறார், அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள். நேற்றுகூடச் செய்தித்தாள்களில் பார்த்தேன்.

தன் ஊதியத்தில் இருந்து, நடைபாதை வியாபாரிகளுக்குத் தள்ளுவண்டிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார் அண்ணன் தங்கபாண்டியன். இப்படித் தொடர்ந்து தன் பணிகளால் தனக்கு மட்டுமின்றி, கழகத்திற்கும், கழக அரசிற்கும் பெருமை சேர்த்து வரும் அண்ணன் தங்கபாண்டியன் அவர்களின் இல்லத் திருமணத்தில் பங்கேற்பதில், உங்களுடன் சேர்ந்து மணமக்களை வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு அமைச்சர்கள், கழக நிர்வாகிகள், முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகள், மணமக்களின் உறவினர்கள் என எல்லோரும் மகிழ்ச்சியாக அமர்ந்து இருக்கிறோம். இங்க நாம் எல்லோரும் மணமக்களை வாழ்த்திப் பேசுகிறோம்.

### சீர்த்திருத்தத் திருமணம்

தமிழில் பேசிக்கொண்டு இருக்கிறோம். எல்லோருக்கும் புரியும்படி பேசிக்கொண்டு இருக்கிறோம்.

இந்தத் திருமணம் சீர்த்திருத்தத் திருமணமாக, சுயமரியாதை உணர்வோடு சிறப்பான திருமணமாக இங்கு நடைபெற்று இருக்கிறது. நம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, இதுபோன்ற திருமணம் செய்வதற்கு, சட்டத்திலேயே இடம் கிடையாது.

1967-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் தந்தை பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமண முறைக்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்கினார், பேரறிஞர் அண்ணா அவர்கள். அதன்பிறகுதான் நிறைய பேர் சுயமரியாதைத் திருமணம் செய்வதற்கு முன் வந்தார்கள்.

இந்தப் பண்பாட்டுப் பரீட்சை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் நடந்துகொண்டு இருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், நம் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும்தான்.

### திராவிட மாடல் ஆட்சி

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், தமிழர்களின் வீட்டுத் திருமணத்தைத் தமிழில் நடத்துவதற்கு உரிமை கிடைக்காமல் போய் இருந்திருக்கும். திருமண நிகழ்ச்சிகளில் தமிழைக் கொண்டு வருவது மட்டுமல்ல, கோவில் கருவறைக்குள்ளும் தமிழைக் கொண்டு வந்தது, நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். கோவில் கருவறைக்குள் தமிழ்மொழியை மட்டுமல்ல, தமிழர்களையே கருவறைக்குள் கொண்டு சென்ற ஆட்சிதான் நம் திராவிட மாடல் ஆட்சி.

### சொத்தில் சம உரிமை

இங்கு ஆண்களுக்கு நிகராக, இன்னும் சொல்லப்போனால் ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாக வந்து இருக்கிறீர்கள். பெண்கள் எல்லாம் அமர்ந்து கொண்டு இருக்கிறீர்கள். ஆண்கள் எல்லாம் மண்டபத்தில் நாற்காலி கிடைக்காமல் ஓரத்தில் நின்று கொண்டு இருக்கிறார்கள். ஆனால், ஒரு காலத்தில் இப்படிக் கிடையாது.

பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதற்கு உரிமை கிடையாது. பள்ளிக்கூடத்திற்குச் செல்வதற்கு உரிமை கிடையாது. 100 வருடத்திற்கு முன்பு மகளிர் மேலாடை உடுத்துவதற்கு உரிமை கிடையாது. இந்த உரிமைகளை எல்லாம் வாங்கிக் கொடுத்தவர்தான், அதற்காகக் குரல் கொடுத்தவர்தான் தந்தை பெரியார்.

சம்பிரதாயம், சடங்கு என்றெல்லாம் இதற்குப் பெயர் வைத்தார்கள். அந்தப் பிற்போக்குத்தனமான நடைமுறைகளை எல்லாம் வேரோடு பிடுங்கி வீசி எறிந்தது நம் திராவிட இயக்கமும், நம் தி.மு.கழகமும்தான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிருக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமையைக் கொடுத்தது, நம் கலைஞர் அவர்கள். இன்றைக்கு நம் முதலமைச்சர் மகளிருக்குத் தேவையான பல திட்டங்களை வழங்கிக்கொண்டு இருக்கிறார்.

அதில் ஒரு சில திட்டங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

### முதல் கையெழுத்து

முதலமைச்சரான பிறகு முதல் கையெழுத்து, பெண்களுக்கு விடியல் பயணத் திட்டத்தைக் கொடுத்தார். கிட்டத்தட்ட ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வரை சேமிக்கிறார்கள். பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வர வேண்டும். பள்ளிக்கூடத்திற்குச் செல்ல வேண்டும். படிக்க வேண்டும். பள்ளிக்கூடத்திற்குச் சென்றால் மட்டும் பத்தாது, கல்லூரிக்குச் சென்று மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சென்று உயர் கல்வி படித்தாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம் கொடுக்கிறார். பல பெண்கள் காலையில் எழுந்து குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும். குழந்தைகளைப் பசியோடு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விடுவார்கள். ஆனால், இன்றைக்கு நம் தலைவர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக முதலமைச்சர் `காலை உணவுத் திட்டம்' என்று தொடங்கி, ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகளுக்கு, காலை உணவு கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

### மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய்

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம். சென்ற ஆண்டுச் செப்டம்பர் மாதம் முதல் இன்றுவரை ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை வழங்குகிறார் நம் முதலமைச்சர் அவர்கள். அதில் சில குறைகள் இருக்கின்றன. விரைவில், அந்தக் குறைகள் எல்லாம் சரி செய்யப்பட்டு, தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் வழங்கப்பட இருக்கிறது. இதையெல்லாம் நீங்கள் மக்களிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்.

### ஒரேயொரு வேண்டுகோள்

மணமக்கள் இருவருக்கும் ஒரேயொரு வேண்டுகோள்தான். உங்களுக்கு நடந்திருப்பது சுயமரியாதைத் திருமணம். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஒரு தமிழ் பெயரை வையுங்கள் என்று கூறிக்கொண்டு மணமக்களை உங்கள் அனைவரின் சார்பாக வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கீதாஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், மாவட்டக் கழகச் செயலாளர் மனோ.தங்கராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சண்முகையா, மார்கண்டேயன், தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர். இராணி ஸ்ரீகுமார், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா இரகு கழக முன்னணியினர், இளைஞர் அணியினர் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

## தூத்துக்குடி மாவட்ட

# அனைத்துத் துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார்!

தூத்துக்குடி,நவ.16-

தூத்துக்குடி மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக மினி டைடல் பார்க், இன்டர்நேஷனல் பர்னிச்சர் பார்க், ரூ.300 கோடி மதிப்பீட்டில் திருச்செந்தூர் மாஸ்டர் பிளான் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார் என தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (14.11.2024) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து அரசு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர், நீங்கள் நலமா உள்ளிட்ட திட்டங்களின் கீழ் பட்டா மாற்றம், சான்றிதழ்கள், நிவாரண உதவித்தொகை உள்ளிட்டவை கோரி மக்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், வளர்ச்சித் திட்ட பணிகள், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்ட பணிகள், குடிநீர் திட்டப்பணிகள், சாலைப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2024) தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில், தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வு கூட்டத்தில், அமைச்சர்கள் திருமதி பி.கீதா ஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், ஊர்வசி செ.அமிர்தராஜ், மேயர் பெ.ஜெகன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது. மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, துணை மேயர் திருமதி செ.ஜெனிட்டா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் நிலுவைக்கான காரணம் குறித்து தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்தும், மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டால் அதற்கான காரணம் குறித்து கேட்டறிந்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தூத்துக்குடி மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், இளைஞர்களுடைய வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. மினி டைடல் பார்க், இன்டர்நேஷனல் பர்னிச்சர் பார்க், பக்தர்களுடைய வசதிக்காகவும் கோயிலைச் சுற்றியுள்ள மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திருச்செந்தூர் மாஸ்டர் பிளான் என பல்வேறு முன்னெடுப்புகளை முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக செயல்படுத்தி வருகின்றார்கள்.

அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் சேவைகள் மக்களுக்கு விரைவாகவும், தரமாகவும் கிடைக்க செய்ய வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கின்றேன். இன்றைய தினம் 7,893 பயனாளிகள் பயனடைகின்ற வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் 206.47 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நலத்திட்டங்கள் பொதுமக்களை சென்றடைய பணியாற்றிய மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வரின் முகவரி, மக்களிடம் முதல்வர் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் பெறப்பட்ட மனுக்களுக்கு விரைந்து தீர்வு காண அலுவலர்கள் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்திய ஒன்றியத்திலேயே மருத்துவ கட்டமைப்புகளில் தமிழ்நாடு சிறந்து விளங்குகின்றது. மருத்துவ சேவைகள் முழுமையாக மக்களுக்கு கிடைக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஜி.வி.மார்க்கண்டேயன், ஊர்வசி செ.அமிர்தராஜ், மேயர் பெ.ஜெகன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம்பகவத், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, துணை மேயர் திருமதி செ.ஜெனிட்டா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் லி.மதுபாலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி இரா.ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.